**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, ERODE

**MCOP CASE NO.169/2025**

2026ம் ஆண்டு மார்ச் மாதம் 04-ம் தேதியன்று அரசு சாட்சியாக விசாரிக்கப்படும் இவ்வாக்குமூலம் 1969ம் ஆண்டு 54-வது சட்டத்திலுள்ள 6(2) பிரிவுகளின்படி திருமதி.K.கிருஷ்ண பிரியா, M.L., தலைமை நீதித்துறை நடுவர், ஈரோடு அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

பெயர் -திரு.பெரியசாமி **PW-1** தொழில் -

த/க பெயர் - வயது -

கிராமம் - தாலுக்கா -

<u>**முதல் விசாரணை:-**</u>

நான் இந்த மனுவில் மனுதாரர் ஆவேன். நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தை ஏற்றக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

| S.No. | Documents | Exhibits No. |
|---|---|---|
| 1. | ஈரோடு வடக்கு காவல்நிலைய குற்ற எண்.310/2023, முதல் தவகல் அறிக்கை ஆன்லைன் நகல் | ம.த.சா.ஆ.1 |
| 2. | பார்வை மகஜர் ஆன்லைன் நகல் | ம.த.சா.ஆ.2 |
| 3. | மாதிரி வரைபடம் ஆன்லைன் நகல் | ம.த.சா.ஆ.3 |

K KRISHNA PRIYA

Digitally signed by K KRISHNA PRIYA
Date: 2026.03.04 18:48:08 +0530

| | | |
|---|---|---|
| 4. | மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை TN 76 AY 6433 Passion Pro இருசக்கர வாகனம் ஆன்லைன் நகல் | ம.த.சா.ஆ.4 |
| 5. | மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை TN 93 B 9556 Splendor Plus இருசக்கர வாகனம் ஆன்லைன் நகல் | ம.த.சா.ஆ.5 |
| 6. | குற்ற இறுதி அறிக்கை ஆன்லைன் நகல் | ம.த.சா.ஆ.6 |
| 7. | FIR Status Report | ம.த.சா.ஆ.7 |
| 8. | மருத்துவ பில் ரூபாய் 65,300/- இந்த ஆவணம் 2 மற்றும் 3-ம் மனுதாரரின் ஆட்சேபணைக்கு உட்பட்டு குறியீடு செய்யப்பட்டது. | ம.த.சா.ஆ.8 |
| 9. | 10.07.2023 - 15.07.2023 வரையிலான டிஸ்சார்ஜ் சம்மரி | ம.த.சா.ஆ.9 |
| 10. | ஊனச்சான்றிதழ் (15%) | நீ.த.சா.ஆ.1 |

**2-ம் மற்றும் 3-ம் எதிர் மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:-**

விபத்து நடந்த சாலை வில்லரசம்பட்டியில் இருந்து கனிராவுத்தர் குளம் செல்லும் தெற்கு வடக்கு சாலை என்றால் சரி. நான் வில்லரசம்பட்டியில் இருந்து கனிராவுத்தர் குளம் நோக்கி சென்று கொண்டிருந்தேன் என்றால் சரி. நாங்கள் மூவர் பயணம் செய்தோம்

K KRISHNA PRIYA

Digitally signed by K KRISHNA PRIYA
Date: 2026.03.04 18:48:12 +0530

என்றால் சரி. என்னுடன் இருசக்கர வாகனத்தில் பயணம் செய்த மற்ற இரண்டு நபர்களும் 30 வயது தாண்டியவர்கள் என்றால் சரி. இருசக்கர வாகனத்தில் இரு நபர்கள் மட்டும்தான் பயணம் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ள எண்ணிக்கை என்றால் சரி. இரண்டு பேர் பயணம் செய்வதற்கும் மூன்று நபர்கள் ஒரே இருசக்கர வாகனத்தில் பயணம் செய்வதற்கும் வித்தியாசம் உள்ளது என்றால் சரி. விபத்திற்கு நான் தான் காரணம் என்றால் சரியல்ல. மூன்று நபர்கள் பயணம் செய்திருந்தால் கட்டுப்படுத்த முடியாத வண்ண வாகனம் இயங்கியதனால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. தொடர் சிகிச்சைக்கான ஆவணங்கள் எனது தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரி. எனக்கு நிரந்தர ஊனம் மற்றும் வருமான இழப்பு இல்லை என்றால் சரியல்ல. நான் கேட்டுள்ள இழப்பீடு மிகையானது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down before me in open court read over to the witness in the presence of accused. Pleaded and admitted by him/her to be correct.

K KRISHNA PRIYA

Digitally signed by K KRISHNA PRIYA
Date: 2026.03.04 18:48:17 +0530

Chief Judicial Magistrate,
Erode.